# கெபிதிகொல்லாவ பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 10 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஜூலை 08 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 426 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 14 | - | - | - |
| | -மேற்படி- | 01 | - | 383 | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 02 | - | - | 402 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 200 | - |
| | -மேற்படி- | 01 | 18 | - | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,744,206 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 563,374 ஆக இருந்தது.

### 1.3.3 தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபை கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் மூலதனப் ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக்கள் கணக்கு மீதிகளுடன் சமமாக இருக்க வேண்டிய போதிலும் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,063,447 தொகையாகவும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 3,541,230 ஆகவும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டு வந்த பிரதான பேரேட்டில் பதவியினர் கடன் கணக்கில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 81,135 ஆக இருந்த போதிலும் பரீட்சை மீதியில் அது ரூபா 439,432 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இவ் வேறுபாடுகளுக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி மன்ற ஊழியர் பங்களிப்புப்பணம் ரூபா 267,294 ஆனது கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. எனினும் பங்களிப்புப்பணம் செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்களும் பிரதேச சபையில் சேவைபுரிந்த காலங்களும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 541,771 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,258,244 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமிண்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 84 ஆம் பிரிவு | வியாபார அனுமதிப்பத்திர வருமானம் மற்றும் வியாபார உரிமை குத்தகை வருமானம் என்பவற்றின் அடிப்படையில் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 மற்றும் 154 ஆம் பிரிவுகள் | குறிப்பிட்ட கட்டணங்களில் 5% ஆன நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 137,500 ஆன கொடுப்பனவுகளில் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 245 | ரூபா 24,564 பெறுமதியான 09 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,161,598 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 846,348 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 102 | 131 | - | 125 | 125 | - |
| (ஆ) | வாடகை | 622 | 1,129 | 93 | 1,253 | 994 | 259 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 244 | 258 | - | 195 | 195 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 1,576 | 6,732 | 765 | 6,242 | 5,477 | 765 |

### 2.2.2 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை அடையாளங்கண்டு அறிவிக்கப்பட்டு அப்பிதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களிலிருந்து வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 524,360 ஆன முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 கடை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/பீஎல்/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்த வாடகையின் மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 20 கடைகளுக்குமான மாதாந்த மதிப்பீட்டு வாடகை 1999 ஆம் ஆண்டிலிருந்து வேறுபாடின்றி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 5,498 | 5,274 | 224 | 4,900 | 4,850 | 50 |
| ஏனையவை | 1,823 | 1,814 | 09 | 3,000 | 2,119 | 881 |
| உப மொத்தம் | 7,321 | 7,088 | 233 | 7,900 | 6,969 | 931 |
| மூலதனச் செலவினம் | - | 3,772 | (3,772) | 2,000 | 16,808 | (14,808) |
| மொத்தம் | 7,321 | 10,860 | (3,539) | 9,900 | 23,777 | (13,877) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 01 | 01 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 09 | 14 |
| | மொத்தம் | 11 | 16 |

(ஆ) மீளாய்வாண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரை விஞ்சி சேர்க்கப்பட்ட 5 ஊழியர்களுக்காக மீளளிக்கப்படாத சம்பளமாக ரூபா 641,700 ஆன தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 130,242 ஆக இருந்ததுடன் அம் முழுப் பெறுமதியும் 01 வருட காலத்தினை விஞ்சிக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 439,432 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,800 ஆக இருந்தது.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,502,877 ஆக இருந்தது.

### 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பிரதம அமைச்சுச் செயலாளரின் 2006 நவம்பர் 14 ஆந் திகதிய என்சிபீ/சீஎம்/ஈடீ/4/21 ஆம் இலக்க மாகாணத் திறைசேரிச் சுற்றுநிருப இல. 2006/8 மற்றும் 2006 செப்தெம்பர் 15 ஆந் திகதிய என்சீபீ/சீஎஸ்/பீரீ/1/107/3 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆகக்கூடிய நாள் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரயாணச் செலவுகள் செலுத்த முயுமாக இருந்த போதிலும் சபையில் பதில் கடமையாற்றிய செயலாளருக்கு உரித்தான 06 நாட்களான ஆகக்கூடிய எல்லையினை விஞ்சி 13 நாட்களுக்காக ரூபா 6,500 பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத் திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.8 ஒப்பந்த நிருவாகம்

#### செயற்திட்டங்கள் அமுல்படுத்துவதில் தாமதம்

(i) ஐயத்திகே 28 குளப் பகுதிகளின் லணு அம்புலேவ கமநல வீதியினை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 684,422 ஆன தொகையில் விவசாயச் சங்கங்களுடன் 2010 நவம்பர் 12 ஆந் திகதி ஒரு ஒப்பந்தத்தில் இணங்கப்பட்டிருந்தது. இவ்வேலைகள் 2011 பெப்ரவரி 12 ஆந்

திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 267,370 ஆன வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய நிதி ஏற்பாடான ரூபா 417,052 ஆன பணம் திரும்பவும் மாகாண திறைசேரியினால் எடுக்கப்பட்டிருந்தது. இதனால் வேலையின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(ii) சுதந்திரப் பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 524,848 தொகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு 2010 நவம்பர் 08 ஆந் திகதி ஐயத்திகேவெவ விவசாயச் சங்கத்துடன் ஒப்பந்த மொன்றில் இணங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் 2011 பெப்ரவரி 08 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்ட சகல விடயங்களினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 யூலை 08 ஆந் திகதி வரையிலும் சுதந்திரப் பூங்காவில் பொருத்தப்பட வேண்டிய ரூபா 312,858 பெறுமதியான உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்